# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 29-04-2020 புதன்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

இந்நகராட்சி கணணி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் சொத்துவரி வசூலினை தீவிரப்படுத்திடும் வகையில் Occupiers டிமாண்ட் நோட்டிஸ் கீழ்கண்டவாறு டோனர்கள் கூட்டுறவு அச்சகம் திண்டுக்கலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.4,25,862/- (GST உட்பட) வழங்கிட மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

| வரிசை எண் | பொருட்களின் விவரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 30A டோனர் | 9 Nos. |
| 2 | 403 டோனர் | 9 Nos. |
| 3 | 1108 டோனர் | 6 Nos. |
| 4 | 1020 டோனர் | 8 Nos. |
| 5 | 2035 டோனர் | 8 Nos. |
| 6 | Occupiers Notice | 5 Book |

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3492**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2020-க்கான வாக்காளர் பட்டியல் வெளியிடும் பொருட்டு வாக்குப்பதிவு மையங்களின் புகைப்படம், தரை வரைபடங்கள் தயார்

செய்த வகைக்கு ரூ.2,395/- செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.167/2019/அ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3493**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 வரிவிதிப்புதாரர் திரு. ஐபன் என்பவரின் வணிகவளாக கட்டிடத்திற்கு 01-04-2008 முதல் வரிநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.2994/2019/V2, நாள் 30-09-2019-ல் ஏற்கனவே சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட திரு. ஐபன் என்பவரின் கட்டிடத்தினை மறு அளவீடு செய்து வரி நிர்ணயம் செய்திட தெரிவிக்கப்பட்டதின்பேரில் மனுதாரரின் கட்டிடம் அளவீடு செய்து 2005-2006 முதல் தரையாண்டு முதல் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்கண்டவாறு உள்ள சொத்துவரி தொகையினை வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

| வரிசை எண் | வரிவிதிப்பு எண்கள் | வருடம் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 149/021/01075 | 2008-2009 I to 2019-2020 II | 3,59,772 |
| 2 | 149/021/01078 | 2008-2009 I to 2019-2020 II | 29,466 |
| 3 | 149/021/01079 | 2008-2009 I to 2019-2020 II | 2,76,348 |
| | | Total | 6,65,586 |

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2103/2019/அ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3494**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களின் சுவர்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அப்புறப்படுத்தி விட்டு விழிப்புணர்வு வாசகங்களை பெயின்டால் எழுதி சீரமைக்கும் பொருட்டு நகராட்சி பார்க், பி.பி.முனுசாமி காம்ளக்ஸ், வெட்டுவெந்நி காய்கறி சந்தை, வெட்டுவெந்நி HIghmast Light, வெட்டுவெந்நி பயணியர் நிழற்குடை, பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் காகிதங்களை அகற்றி விட்டு வண்ணம் அடித்து விழிப்புணர்வு வாசகம் மற்றும் படங்கள் வரைவதற்கென ரூ.1,70,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3495**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 17 மற்றும் 18 பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு பம்மம் பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து 90mm PVC பைப் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மார்த்தாண்டம் சந்திப்பிலிருந்து குலசேகரம் சாலையிலுள்ள குழாய் பதிக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேலாகியுள்ளதால் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதோடு வாகன போக்குவரத்து காரணமாக குழாய் பழுதடைந்தும் உள்ளது. இதனால் அப்பகுதியில் Shafi Traders வரையுள்ள சுமார் 250 குடியிருப்புகளுக்கு குடிநீர் சரிவர வினியோகம் செய்ய இயலவில்லை. எனவே அப்பகுதியில் சுமார் 400 மீட்டர் நீளத்திற்கு புதிதாக PVC பைப்லைன் அமைக்கவும் சாலை மாநில நெடுஞ்சாலையாக உள்ளதால் குழாய் பதித்தபின்பு காங்கிரீட் போட்டு சாலையினை சீரமைக்கவும் ரூ.6.75 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3496**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 6</u>

தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் தொடர்பாக குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.9,660/- மாலை மலர் நாளிதழுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரப் பட்டியல் தொகை வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3497**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 2, 6, 9 மற்றும் 10 ஆகியவற்றிற்கு குடிநீர் வினியோகம் செய்வதற்கென 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்று கழுவன்திட்டை பகுதியில் அமைந்துள்ளது. இதனை நிரப்புவதற்கென நீர்உந்து குழாய் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நேசமணி பாலம் வழியாக செல்கிறது. தற்போது நெடுஞ்சாலை துறையினரால் நேசமணி பாலத்தின் பக்கவாட்டில் தடுப்பு சுவர் கட்டுவதற்கென பள்ளம் தோண்டப்பட்டுள்ளது. இதனால் மண் சரிவு ஏற்பட்டு நீர் உந்து குழாய் உடைந்து தண்ணீர் விநியோகம் பாதிப்படைந்துள்ளது. இதனை சீரமைத்து புதிதாக PVC குழாய் தற்காலிகமாக நெடுஞ்சாலையின் குறுக்கே அமைத்திட ரூ.2,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன்கீழ் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயச்சந்திரன் மூலம் பணி செய்யப்பட்டமைக்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண் : 3498
அனுமதிக்கலாம்

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75AL.6628-ன் Amplifier. மற்றும் Mini Horn பழுதடைந்துள்ளதை மாற்றி புதிதாக Amplifier (ம) horn. விநியோகம் செய்வதற்கு 12-03-2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

1) Annai Electronic Spares Marthandam. - Rs.8880
2) Vijay Electronics Madurai. - Rs.9146
3) Matha Electronics Madurai. - Rs.9624

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் Annai Electronic Spares விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3499**
**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு கீழ்காணும் பொருட்கள் Tamil Nadu Multipurpose என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிட சுகாதார அலுவலர் 10-04-2020-ம் தேதிய அறிக்கை செய்துள்ளதனடிப்படையில் மேற்படி நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

1) PPE Kit - 125 Nos.
2) Face Mask V.44 - 150 Nos.
3) Face Mask FFB -1 - 200 Nos.
4) Hand gloves - 300 Nos.
5) Sanitaizer Liquied - 125 Lit.

ந.க.எண்.19/2020/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3500**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு கீழ்காணும் பொருட்களை Popular Chemicals, Coimbator என்ற நிறுவனத்திடம் வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் 10-04-2020-ல் அறிக்கை செய்துள்ளதனடிப்படையில் மேற்படி நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

1) Power Sprayer (16 lr.) - 5 Nos.
2) 2.5H.P. Motor Sprayer - 1 No.
3) Sintex ( 500 lr.) - 1 No.

**நகர்மன்ற தீர்மான எண் : 3501**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு Thermal Scanner - 3 Nos. - Thermal Scanner Lotus International Service, Chennai என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் அறிக்கை செய்துள்ளதனடிப்படையில் Themal Scanner - 3 Nos. வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3502**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகாரணங்கள் வாங்கிட மன்றம் தனது தீர்மானம் எண்.3476, நாள் 20-03-2020-ல் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதில் பொருட்கள் வாங்கி வழங்கப்பட்டது. தற்போது மீண்டும்

பொருட்கள் வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் 10-04-2020-ல் அறிக்கை செய்துள்ளதனடிப்படையில் பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.30.00 லட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3503**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு கீழ்காணும் பொருட்கள் Sana & Company Thiyagaraja nagar, Tirunelveli என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலரின் 10-04-2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதனடிப்படையில் கீழ்காணும் பொருட்களை Sana & Company என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

1) பிளிச்சிங் பவுடர் - 5 M.T.
2) நிர்த்திய சுண்ணாம்பு - 5 M.T.

**நகர்மன்ற தீர்மான எண் : 3504**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு கீழ்காணும் பொருட்களை இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையிலிருந்து வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வர் மற்றும் சுகாதார அலுவலர் 10-04-2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதனடிப்படையில் கீழ்கண்டுள்ள பொருட்கள் வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

1) Lyzol - 500 lr.

2) 1% Hydro chlorination - 500 lr.

3) Sprit (Medical) - 100 lr.

4) Mask (N.95) - 300 Nos.

5) Gloves (Medical) - 500 Nos.

6) Hand wash Liquid - 300 Nos.

7) Soap (Detol) - 300 Nos.

8) Apron (Amma canteen) - 20 Nos.

9) Sanitizer - 300 Nos.

10) Phynole - 500 lr.

**நகர்மன்ற தீர்மான எண் : 3505**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 95-வது வாவுபலி பொருட்காட்சி தொடர்பாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 20-03-2020-ம் நாளிட்ட தினமணி பத்திரிகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்த வகையில் ரூ.21090/-ஐ தினமணி Express Publication (Madurai) என்ற நிறுவனத்தின் மூலம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண்.490/2020/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3506**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகம் 2013-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்கள் முடிவடைந்துள்ளது. தற்போது அம்மா உணவகத்தின் சமையல் அறையிலுள்ள மாவு அரைக்கும் இயந்திரத்தின் மோட்டார், சமையல் சாதனங்கள்,Plastic Chair, Dining Hall-ல் உள்ள Table, Stainless Table, Table fan, Weighing Machine, Ceiling fan, சமையல் அறையிலுள்ள wall Tiles, Roofing Sheet பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பழுதுகள் நீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.3,20,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3507**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சி பேருந்து நிலைய சாலையில் மார்க்கெட் முன்பக்கத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் சந்தைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க மதிப்பீடு ரூ.4,10,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3508**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சி கொரோனா -19 நகர பகுதிகளில் நோய் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள், டெங்கு களப்பணியாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா பணியாளர்களுக்கு தினந்தோறும் காலையில் தேநீர் வழங்கிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என

நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் கள ஆய்வின்போது நேரில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் 26-03-2020 முதல் 03-05-2020 வரையில் தினசரி காலையில் தேநீர் வழங்கிட உத்தேச செலவு ரூ.60,000/-க்கு மன்ற அனுமதிக்காக.
ந.க.எண்.19/2020/அ 2

**நகர்மன்ற தீர்மான எண் : 3509**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 19</u>

குழித்துறை நகராட்சி சார்பில் கொரோனா-19 பொது மக்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பத்திரிகையில் பிரசுரம் செய்த வகையில் கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | நாள் | நாளிதழ் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1. | 08-04-2020 | தினகரன் நாளிதழ் | 9647.40 |
| 2. | 09-04-2020 | தினதந்தி நாளிதழ் | 7320.00 |
| 3 | 09-04-2020 | தமிழ் முரசு நாளிதழ் | 9744.00 |

ந.க.எண்.19/2020/அ2

**நகர்மன்ற தீர்மான எண் : 3510**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN75M.4923-ற்கு 2020-2021-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.25000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவுமி மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3511**
**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 21

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் பண்ணியணி பகுதியில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் புதிதாக அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. அதில் செப்டிட் டேங்கு, குடிநீர் வசதி செய்தல், கட்டிடத்தின் மேல்பகுதியில் Weathering Course with pressed Tiles போட உத்தேச மதிப்பீடு ரூ.1,60,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3512**

**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 22

குழித்துறை நகராட்சியின் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளிக்க மெக்கானிக் ஸ்பேரயர் -2 எண்ணம் வாங்கி வழங்கிட சுகாதார அலுவலரின் 27-04-2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதனடிப்படையில் மெக்கானிக் ஸ்பேரயர் - 2 எண்ணம் திண்டுக்கல் இன்கோ சர்வு என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிடவும் அதற்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3513**

**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.